www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11T

விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2025

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் | பொதுத்தமிழ் | மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **14×1=14**

1) தவறான இணையைத் தேர்வு செய்க.

அ) மொழி+ஆளுமை - உயிர்+உயிர் ஆ) கடல்+அலை - உயிர்+மெய்

இ) தமிழ்+உணர்வு - மெய்+உயிர் ஈ) மண்+வளம் - மெய்+மெய்

2) சரியான தொடரைத் தேர்க.

அ) காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கிடைக்கும்.

ஆ) முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.

இ) காலத்துக்கேற்றபடி புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.

ஈ) தேர்வெழுத வேகமாகப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.

3) 'புல்லின் இதழ்கள்' நூலின் ஆசிரியர்?

அ) வால்ட் விட்மன் ஆ) ஸ்டெஃபான் மல்லார்மே

இ) பாப்லோ நெரூடா ஈ) எர்னஸ்ட் காசிரர்

4) பொருத்தமான இலக்கிய வடிவம் எது?

அ) ஏதலிக்குருவிகள் - மரபுக்கவிதை

ஆ) திருமலை முருகன் பள்ளு - சிறுகதை

இ) யானை டாக்டர் - குறும்புதினம்

ஈ) ஐங்குறுநூறு - புதுக்கவிதை

5) "வான் பொய்த்தது" என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

6) உலக சிட்டுக்குருவிகள் நாள்?

அ) ஏப்ரல் 20 ஆ) மார்ச் 22 இ) ஏப்ரல் 22 ஈ) மார்ச் 20

7) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:**

1. வெள்ளிவீதியார் - அ) புறநானூறு
2. அண்ணாமலையார் - ஆ) சி.சு.செல்லப்பா
3. வாடிவாசல் - இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி - ஈ) காவடிச்சிந்து

1) அ ஆ இ ஈ 2) ஆ ஈ அ இ 3) இ ஈ ஆ அ 4) இ ஈ அ ஆ

8) பகுபத உறுப்புக்களுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?

அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம்

ஆ) பகுதி, இடைநிலை, சாரியை

இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி

9) துன்பப்படுபவர் .............

அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்

இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

10) ஒட்டுப் போடாத

ஆகாயம் போல - இந்த

உலகமும் ஒன்றே தான் - இக்கவிதையில் பயின்று வருவது

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11) 9 அடி சிற்றெல்லையும், 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு

12) 'மறைக்கப்பட்ட இந்தியா' என்ற நூலின் ஆசிரியர்
அ) பிரபஞ்சன் ஆ) சி.சு. செல்லப்பா
இ) எஸ். இராமகிருஷ்ணன் ஈ) ஜெயமோகன்

13) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

14) நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது
அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை
இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** **3×2=6**

15) இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16) வளரும் <u>காவில் முகில்தொகை ஏறும்</u>
பொன்மாடம் எங்கும் அகிற்புகை நாறும் - அடிக்கோடிட்ட தொடர் குறிப்பிடுவது என்ன?

17) குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?

18) எப்போது மருந்து தேவையில்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×2=4**

19) உ.வே.சா. அவர்கள் பயின்ற கல்வி முறை குறித்துக் குறிப்பு வரைக.

20) "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

21) பேச்சுமொழி, எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக:** **7×2=14**

22) **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக:**
பிறர் செய்யாவிட்டாலும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை.

23) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
கனை, கணை

24) **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:**
அ) மன்னராட்சி காலத்தில் போர் பயிற்சிகளை தருவதும் முக்கியமான கல்வியாக கருதப்பட்டது.
ஆ) கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்.

25) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:**
அறிவில்லாதவன்

26) **கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக:**
அ) Book Review ஆ) Sailor

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27) பிறமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:

அ) விசா ஆ) பத்திரிகை

28) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக:

அ) பொதுச்சிறப்பு ஆ) சிறுகோல்

29) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:

அ) மறுத்து ஆ) துஞ்சல்

30) பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** 2×4=8

31) காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?

32) தமிழ் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

33) மேகத்திடம் கூறுவது போலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

34) விரும்பியதை அடைவது எப்படி? குறள் வழி விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக:** 2×4=8

35) 'என்னுயிர் தமிழ் மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36) சமணப் பள்ளிகளும் பெண் கல்வியும் - குறிப்பு வரைக.

37) ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

### பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக:** 3×4=12

38) அ) உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

**(அல்லது)**

ஆ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

- **இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

39) **பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக:**

அ) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**(அல்லது)**

ஆ) இக்கரைக்கு அக்கரை பச்சை

40) **இலக்கிய நயம் பாராட்டுக: (மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக)**

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

- **கவிமணி**

www.Padasalai.Net


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41) **தமிழாக்கம் தருக:**

1. A picture is worth a thousand words.
2. Winners don't do different things, they do things differently.
3. Looking at beauty in the world is the first step of purifying the mind.
4. A nation's culture resides in the hearts and in the soul of its people.

42) **கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக:**




43) பொருண்மொழிக்காஞ்சித்துறை - விளக்குக.

## பகுதி - IV

***அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும்:*** **3×6=18**

44) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'சுற்றுச்சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே' என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.

45) அ) கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம்வழி நிறுவுக. **(அல்லது)**

ஆ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

46) அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) பிம்பம் கதையின் வாயிலாகப் பிரபஞ்சன் தெளிவுபடுத்தும் மனித முகங்களைப் பற்றி விவரிக்க.

## பகுதி - V

***அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:*** **4+2=6**

47) அ) ''அம்மா வாழி'' எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) ''செயல்'' என முடியும் குறளை எழுதுக.

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com